# இரவா! பகலா!



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



ஒரு நாள் இரவு...காட்டில் அனைத்து விலங்குகளும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தன. நிலா வெள்ளை ஒளியாய் புல்வெளியில் பாய்ந்தது. நட்சத்திரங்கள் வானில் மின்னின. அந்த ஒளியில், ஆந்தையின் கண்கள் மஞ்சள் ஒளியாக ஜொலித்தது.



ஆந்தை “ஹூ... ஹூ...” என்று
சிரித்துக்கொண்டே பறந்தது. இரவின்
நிலவொளியும் காட்டின் அமைதியும் அதற்கு
மிகவும் பிடித்தது. காடு முழுக்க
சுற்றிச் சுற்றி வந்தது.

அப்போது ஒரு சிறிய குகையில் சிங்கம்
தூங்கிக்கொண்டு இருந்ததைப் பார்த்தது.


"நீங்கள் ஏன் இரவில் தூங்குகிறீர்கள்? நிலாவின் ஒளி, நட்சத்திரத்தின் அழகு அதை ரசிக்கவில்லையா?" என்றது.
"அதற்கு சிங்கம் ஒரு கண்ணை மட்டும் விழித்துப் பார்த்து, 'பகலில் தான் எங்களுக்கு உணவு கிடைக்கும். அதனால்தான் இரவில் ஓய்வெடுக்கிறோம்" என்று கூறியது.


மாமரக் கிளையில் இருந்த குயில் இனிய குரலில் ‘கூக்கூ.... கூக்கூ....’ எனக் கூவியது.
“நான் காலை சூரிய ஒளியில் தான் பாடுவேன். அந்த ஒளி என் குரலை அழகாக்கும்.” எனக் கூறியது.



குயிலின் குரல் கேட்டு விழித்த குரங்கு, குயிலிடம் நான் “பகலில் மரத்திற்கு மரம் தாவும் போது சூரிய ஒளி தான் எனக்கு வழி காட்டும். மாலையில் சோர்வாகி, நிலாவின் ஒளியில் தூங்கிவிடுவேன்.” என்றது.



அப்போது அங்கு வந்த வெளவால்,
குரங்கிடம் சொன்னது, “எங்களுக்குப் பகலில் தான் தூங்கப் பிடிக்கும் அதுவும் தலைகீழாக எனக் கூறி சிரித்தது. சூரிய வெப்பத்தில் இறக்கைகள் சீக்கிரம் சோர்வடைந்துவிடும். இருட்டு தான் எங்களுக்குப் பாதுகாப்பு! நாங்கள் கண்களால் பார்ப்பதை விட, ஒருவித சத்தத்தை (echolocation) எழுப்பி, இரையைக் கண்டுபிடிப்போம். அதனால்தான் இந்த நிலவொளி எங்களுக்குப் பிடித்திருக்கிறது!” என்றது.


அப்போது,புல்வெளியில் நின்று கொண்டே
தூங்கிக்கொண்டிருந்த குதிரை அவர்கள்
பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தது.




குதிரை கனைத்துக்கொண்டே “நீங்கள் சொல்வது சரிதான். சூரிய ஒளியில், புல்வெளிகளில், காற்றை விட வேகமாக ஓடுவது எனக்குப் பிடிக்கும். இரவு என்பது அடுத்த நாள் ஓட்டத்திற்காக என் கால்களுக்கு நான் தரும் ஓய்வு நேரம்.” என்றது.



அங்கு தன் நாக்கைச் சுழற்றிக் கொண்டு எறும்பு தின்னி வந்தது. “நானும் வௌவாலைப் போலத்தான்! பகல் வெப்பத்தில் என்னால் அலைய முடியாது. இரவு நேரத்தில்தான் எறும்புகளும்,கரையான்களும் புற்றிலிருந்து வெளியே வரும். அப்போது அவற்றை வேட்டையாடுவது எளிது” எனக் கூறியது.

“நண்பரே, நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை! நான் பகலாடியா இருந்தாலும், நிலவு வெளிச்சத்தில் மரங்களின் நிழலோடு மறைந்து இருட்டில் பதுங்கிச் சென்று, என் கூர்மையான காதுகளால் இரையின் சத்தத்தைக் கேட்டு வேட்டையாடுவதில் நான் சிறந்தவன்”. என்று நரி ஊளையிட்டுக் கூறியது.



நரியாரே, உங்கள் தந்திரம் தான் காட்டுக்கே தெரியுமே. வேட்டைக்கு தான் இரவு தேவை, என் அழகிய சிறகையும் நடனத்தையும் பார்க்க விரும்பினால் பகலில் தான் வர வேண்டும் என்று கூறி சோம்பல் முறித்தது மயில்.



அப்போது, தூரத்தில் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் மெல்லக் காட்டிற்குள் நுழையத் தொடங்கின. இரவுப் பறவையான ஆந்தை, வெளிச்சத்தைக் கண்டதும் தன் கண்களைச் சிமிட்டித் தவித்தது. குகையின் மேல் கம்பீரமாக வந்து நின்ற சிங்கம், ஒரு நீண்ட கொட்டாவி விட்டுவிட்டுப் பெரிய சத்தத்துடன் முழக்கமிட்டது.

“ஆந்தையாரே! ‘இரவின் அழகைப் பாருங்கள்’ என்று நீங்கள் எங்களிடம் பேச ஆரம்பித்தது, இப்போது விடிந்தே......விட்டது” என்றது சிங்கம்.





ஆந்தையுடன் அனைத்து விலங்குகளும் சிரித்தபடி கலைந்தன. சூரியனின் பொன்னொளி ஒருவருக்கு, நிலவின் வெண்ணொளி மற்றொருவருக்கு என இயற்கை அனைவருக்கும் கொடுத்துள்ளது. நாம் தான் சரியாக பயன்படுத்த வேண்டுமென கூறிச் சென்றது.



**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com